

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், பள்ளி மேம்பாட்டு மானிய நிதியின் கீழ், சேலம், பாவடி நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் நான்கு வகுப்பறைக் கட்டடங்களை நேற்று முன்தினம் (07.01.2026) திறந்து வைத்தார். உடன், சேலம் மாநகராட்சி மேயர்ஆ.ராமச்சந்திரன், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, முதன்மை கல்வி அலுவலர் திருமதி ப.மகேஸ்வரி, அம்மாப்பேட்டை மண்டல தலைவர்கே.டீ.ஆர்.தனசேகரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில்

# சேலத்தில் வீட்டு வசதி திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம்!

## பொன்.குமார் முன்னிலையில் நடைபெற்றது!

சேலம், ஜன. 9 –

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 05.01.2026 அன்று சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் முன்னிலை யில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய வீட்டு வசதி திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது :

முதலமைச்சர் அவர்கள் கொரோனா பெருந்தொற்று கடுமையாக இருந்த காலகட்டத்தில் பொறுப்பேற்று தனது திறமையால் சிறப்பான ஆட்சியை மேற்கொண்டு வருகிறார்கள். உழைக்கும் மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வரும் முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் அனைத்து தரப்பு மக்களுக்கும் அனைத்து நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்று திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறார்கள்.

குறிப்பாக மகளிர், மாற்றுத்திறனாளிகள், முதியோர் ஆகிய அனைத்து தரப்பு மக்களுக்கு அரசின் திட்டங்கள் அனைத்தும் நேரடியாக சென்றடையும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் தொடர்ச்சியாக உடல் உழைப்பு தொழிலாளர்கள் மேல் மிகுந்த அக்கறை கொண்டு தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, விபத்து மரணம், ஓய்வூதியம் என அனைத்தையும் உயர்த்தி வழங்கி அவர்களை கை தூக்கி விடும் அரசாக சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் தொழிலாளர்களுக்கு வழங்கி வரும் அனைத்து திட்டங்களையும் அவர்களுக்கு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் நடைபெற்று வரும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தின் சார்பில் 3024 பயனாளிகளுக்கு ரூ.1.08 கோடி மதிப்பீட்டில் கல்வி உதவித்தொகை, 109 பயனாளிகளுக்கு ரூ.20.41 இலட்சம் மதிப்பீட்டில் திருமண உதவித்தொகை, 6 பயனாளிகளுக்கு ரூ.4500 மதிப்பீட்டில் கண்கண்ணாடி, 1 பயனாளிக்கு மாதந்தோறும் ரூ.1200 வழங்கும் ஓய்வூதியம், 8 பயனாளிகளுக்கு இயற்கை மரண உதவித்தொகையாக ரூ.2.80 இலட்சம், 1 பயனாளிக்கு விபத்து மரண உதவித்தொகையாக ரூ.2.05 இலட்சம், வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (எல்டைப்) 16 பயனாளிகளுக்கு ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக்கொள்ள உதவித்தொகையும், வீட்டு வசதி திட்டத்தின் கீழ் (எம்டைப்) 20 பயனாளிகளுக்கு ரூ.29.11 இலட்சம் மதிப்பீட்டில் 20 பயனாளிகளுக்கு வீடுகளும் என மொத்தம் 3185 பயனாளிகளுக்கு ரூ.2.27 கோடி மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ள பயனாளிகள் தங்கள் வாழ்வில் மென்மேலும் உயர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் அவர்கள் பேசியதாவது : –

முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவையில் 10,000 கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் வீடுகள் வழங்கும் திட்டத்தினை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். கட்டுமான தொழிலாளர்களுக்கு கடந்த 5 ஆண்டுகளில் ரூ.3000 கோடிக்கு மேல் நலத்திட்டங்களை வழங்கியுள்ளார்கள். மேலும் பல புதிய திட்டப்பணி களையும் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக திருமண நிதியுதவி ரூ.5,000 இருந்து ரூ.20,000 ஆகவும், மகப்பேறு உதவித்தொகை ரூ.6,000 இருந்து ரூ.18,000 வரையிலும், விபத்து மரண உதவித்தொகையாக ரூ.8,00,000 உயர்த்தி வழங்கியதுடன் கல்வி உதவித் தொகை 6ம் வகுப்பு முதல் வழங்கி வருகிறார்கள்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக வீடு கட்டும் தொழிலாளர்களுக்கு கட்டாயம் சொந்த வீடு இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் சொந்தமாக மனை வைத்திருந்தால் வீடு கட்டிக்கொள்ள ரூ.4,00,000 உதவித்தொகையும், சொந்தமாக மனை இல்லாதவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வீடுகள் வழங்கும் திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், கட்டுப்படுத்த முடியாத சர்க்கரை நோய், கேன்சர் உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்ட கட்டுமானத் தொழிலார்களுக்கு ரூ.12,000, ஓய்வு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியமாக ரூ.1200 வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.3,000 வழங்கப்படும் என அறிவித்திருக்கிறார்கள்.

இவ்வாறாக கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தியுள்ளார்கள் மேலும், தேவைப்படும் அனைத்து உதவி களையும் செய்திடவும் முதலமைச்சர் அவர்கள் தயாராக உள்ளார்கள்.

இவ்வாறு தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் பொன்குமார் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, தொழிலாளர் உதவி ஆணையர்கள் சண்பகராமன் (சமரசம்), திருநந்தன் (அமலாக்கம்) உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கரூர் மாவட்டத்தில்

# ரூ.4500 கோடி மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு வசதிகள்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேச்சு!

கரூர், ஜன.9–

கரூர் மாவட்டத்தில் ரூ.4500 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது என குடிநீர் திட்ட விநியோகம் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில் பாலாஜி தெரிவித்தார்.



கரூர் மாவட்டத்தில் சீரான குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு தொடர்பான அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் கரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி செந்தில் பாலாஜி தலைமை வகித்தார். ஆட்சியர் மீ. தங்கவேல் முன்னிலை வகித்தார்.

வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ– பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்குவதை உறுதி செய்வதை தொடர்ந்து கண்காணித்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அந்தவகையில் கரூர் மாவட்டத்தில் சீரான குடிநீர் விநியோகம். தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் நகர்ப்புற தூய்மை தொடர்பாக அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடத்தப்படுகிறது. கரூர் மாவட்டம் முழுவதும் குடிநீர் தொடர்பான பணிகளுக்கு முக்கியத்து வம் அளித்து அலுவலர்கள் பணியாற்ற வேண்டும். இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சி கள். ஊராட்சி ஒன்றியங்கள் என அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்கப்பட்டு வரும் குடிநீரின் அளவு மற்றும் குடிநீரின் தேவைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கரூர் மாவட்டம் முழுவதும் சீரான குடிநீர் விநியோகம் வழங்கிடுவதை அலுவலர்கள் உறுதி செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நடைபெற்று வரும் குடிநீர் மேம்பாட்டு பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கூட்டு குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் எவ்வித மின் தடையும் இல்லாமல் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படு வதை உறுதி செய்திடவும். குடிநீர் குழாய்களில் உடைப்புகள் ஏற்பட்டால் உடனுக்குடன் சரி செய்திட வேண்டுமெனவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதே போன்று. குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் எதேனும் இருப்பின் அவற்றை போர்க்கால அடிப்படையில் விரைந்து சீரமைத்திடவும், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளான சாலை வசதிகள், குடிநீர் வசதிகள். தெரு விளக்கு வசதிகள், சுகாதார வசதிகள் உள்ளிட்ட பணிகள் நாள் தோறும் முறையாக நடைபெற்று வருகிறதா என்பது குறித்து தொடர்புடைய அலுவலர்கள் தினந்தோறும் ஆய்வுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள் கிடைத்திடுவதை உறுதி செய்திட வேண்டும்.

கரூர் மாவட்டத்தில் 4.5 ஆண்டுகளில் ரூ. 4.500 கோடி மதிப்பீட்டில் சாலை வசதிகள். குடிநீர் வசதிகள், தெரு விளக்கு வசதிகள், சுகாதார வசதிகள் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கரூர் மாநகராட்சியில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் சாலை விரிவாக்க பணிகள் நடைபெற்றுள்ளதென வி.செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை), ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாவட்ட வருவாய் அலுவலர் விமல்ராஜ், ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர் மரு.வீரபத்திரன், மாநகராட்சி ஆணையர் சுதா மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



05.01.2026 – திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. தாராபுரம் மேற்கு ஒன்றியம், கோவிந்தபுரம் ஊராட்சி பாக எண்கள் : 62,63,64 வாக்குச்சாவடிகளில் ‘ என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ‘ தெருமுனை கூட்டம் நடைபெற்றது. ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக நிர்வாகிகளுக்கும், பொறுப்பாளர்களுக்கும் ஆலோசனைகள் வழங்கினார். ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.வி. செந்தில்குமார் தலைமையில், கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகரன் முன்னிலையில் நடைபெற்றது. கழக பேச்சாளர் பவானிகண்ணன் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தின் இறுதியில் கழக செயலாளர் பி. ரவிச்சந்திரன் நன்றியுரையாற்றினார். மேலும் பாகநிலை முகவர்கள், பூத் டிஜிட்டல் முகவர்கள், கழக நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் , சார்பு அணி அமைப்பாளர்கள், கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாப் பட்டணம் தெற்கு ஒன்றியம் கூட்டாத்துப்பட்டி ஊராட்சி மேல்நிலைப் பள்ளியில் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழாவில் தெற்கு ஒன்றியச் செயலாளரும், முன்னாள் ஒன்றியக் குழுத் தலைவருமான ஏ.விஜயகுமார் கலந்து கொண்டு வழங்கினார். உடன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரும் பெற்றோர் – ஆசிரியர் கழக தலைவருமான நாகராஜ், பள்ளி தலைமை ஆசிரியர், பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம்,பாலக்கோடு பெலமாரன வாக்குச்சாவடி எண் 103–ல் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடி” செயல் திட்டம் கூட்டம் நடைபெற்றது. அதை தொடர்ந்து தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வீடு வீடாகச் சென்று பொதுமக்களுக்கு கழக ஆட்சியின் நான்கரை ஆண்டு சாதனை விளக்க துண்டு பிரசுரங்கள் வழங்கினார்.உடன் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.முனியப்பன், பி.கே.முருகன், செழியன், ராஜேஸ்வரி, சந்துரு உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.

### கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் மீனவர்களுக்கு பொன்னான வாய்ப்பு!

# மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு 100 இடங்களில் சிறப்பு முகாம்!

## கழக மீனவர் அணிச் செயலாளர், மீனவர் நலவாரியத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

*சென்னை, ஜன. 9-*

*“கழகத் தலைவரின் பொற்கால ஆட்சியில் மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கைக்கு 100 இடங்களில் சிறப்பு முகாம் நடைபெறுகிறது” என்று மீனவர் நல வாரியத் தலைவரும் கழக மீனவர் அணி செயலாளருமான அ. ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*



*இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*கழக மீனவர் அணி செயலாளரும், தமிழ்நாடு மீனவர் நலவாரியத் தலைவருமான முனைவர். அ. ஜோசப் ஸ்டாலின் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, “கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் பொற்கால ஆட்சியில் மீனவர்கள் நலன் சார்ந்து ஏராளமான நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையை 8000 ரூபாயாக உயர்த்தியது தொடங்கி மீனவர்கள் நலன்நாடும் பல திட்டங்கள் கழக ஆட்சியில் செயல்படுத்தப்பட்டுள்ளன.*

*அந்தவகையில் தமிழக மீனவர்களுக்கு கூடுதல் பலன்களைக் கொடுக்கும் வகையில் அவர்களை மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேர்க்கும் வகையில் தமிழகம் முழுவதும் 100 சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. இதற்கான சிறப்பு முகாம்கள் 8 ஆம் தேதி தொடங்கி, வரும் 31 ஆம் தேதிவரை நடக்கிறது. முதல் நிகழ்வாக குமரி மாவட்டத்தில் வரும் 8 ஆம் தேதி இந்த முகாம் தொடங்குகிறது. ஒவ்வொரு ஊரிலும் நடக்கும் முகாம்கள் குறித்து மீன்வளத்துறை அலுவலகம் மூலம் சுற்றறிக்கையாக அனுப்பி விழிப்பூணர்வூட்டப்பட்டு வருகிறது.*

**யாரெல்லாம் சேரலாம்?**

*18 வயது முதல் 65 வரையுள்ள மீன் தொழிலாளர்கள் மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேரலாம். இதுவரை உறுப்பினராக இல்லாதவர்களை உறுப்பினர்களாகச் சேர்ப்பதன் மூலம் பயனாளிகளை விரிவுபடுத்துவதுடன், கழகத் தலைவர் மீனவ சமூகத்திற்கு வழங்கியிருக்கும் திட்டங்களையும் அவர்களிடம் கொண்டு சேர்ப்பதே இதன் முதன்மை நோக்கம்.*

**தேவையான ஆவணங்கள்**

*மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு வயது மற்றும் இருப்பிடத்தைக் காட்டும் வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களான குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட இதர முக்கிய ஆவணங்களின் நகல், வாரிசுதாரர்களின் ஆதார் அட்டை நகல் ஆகியவற்றோடு, உறுப்பினராக சேர வரும் மீனவர்கள் தங்களது பாஸ்போர்ட் சைஸ் புகைப்ப டத்தையும் கொண்டு வரவேண்டும்.*

**செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

*நலவாரியத்தில் உறுப்பினராக இருக்கும் மீன் தொழிலாளர்களுக்கு ஏராள மான நிவாரணங்களும், உதவித் தொகையும் பெறமுடியும். உறுப்பினராக இருக்கும் மீன் தொழிலாளி விபத்தினால் மரணம் அடைந்தால் 2 லட்சம் ரூபாயும், இரண்டு கைகளையோ, அல்லது இரு கால்களையோ இழந்திருந்தால் ஒரு லட்சம், ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு ஏற்பட்டால் ஒரு லட்சம் என நிவாரணத் தொகை வழங்கப்படும்.*

*இதேபோல், இருகண்களிலும் பார்வை இழப்பு ஏற்படும்பட்சத்தில் ஒரு லட்சம் ரூபாயும், உடல் உறுப்புகளில் ஏதேனும் விபத்தில் இழப்பு ஏற்பட்டால் 50 ஆயிரம் ரூபாயும் நிவாரணமாக வழங்கப்படும். இதே போல் மீன்பிடித் தொழிலின் போது ஏற்படும் உயிரிழப்பிற்கும் 2 லட்சம் ரூபாய் இழப்பீடாக வழங்கப்படும். இயற்கை சீற்றத்தினாலோ, பேரிடரினாலோ கடலில் மீனவர்கள் காணாமல் போனாலும் நலவாரிய உறுப்பினராக இருக்கும் மீனவரின் குடும்பத்திற்கு 2 லட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும். இதே போல் நலவாரியத்தில் உறுப்பினராக இருக்கும் மீனவர் இயற்கை மரணம் அடைந்தால் 25000 ரூபாயும், அவரது ஈமச் சடங்கு செலவிற்கென 2500 ரூபாயும் வழங்கப்படும்.*

**கல்விக்கு கைகொடுக்கும் திட்டம்!**

*நலவாரியத்தில் உறுப்பினராக இருப்பவரின் மகன், மகளுக்கு ஆண்டுதோறும் கல்வி உதவித்தொகையும் கிடைக்கும். நலவாரிய உறுப்பினரின் மகன் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் 1250 ரூபாயும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 1750 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். இதேபோல் உறுப்பினரின் மகள் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 1500 ரூபாயும், 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதும் 2500 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும்.*

*உறுப்பினரின் மகன் ஐடிஐ, பாலிடெக்னிக் போன்ற தொல்நுட்பக் கல்வி பயின்றால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 1950 ரூபாயும், கலைக் கல்லூரிகளில் இளங்கலை படித்தால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 2500 ரூபாயும் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். முதுகலை படிப்பிற்கு ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 3750 ரூபாய் வழங்கப்படும். சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற இளங்கலை தொழிற்படிப்புகளுக்கு அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு 4750 ரூபாய் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும். இதேபோல் முதுகலை தொழில் கல்வி பயின்றால் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 6750 ரூபாய் கல்வி உதவித்தொகையாக வழங்கப்படும்.*

*நலவாரிய உறுப்பினர்களின் மகனின் திரு மணத்திற்கு 3000 ரூபாயும், மகளின் திருமணத்திற்கு 5000 ரூபாயும் வழங்கப்படும். இதேபோல் மகப்பேறு காலத்திலும் 6000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும். தமிழகத்தின் 14 மாவட்டங்களிலும் இருக்கும் மீனவ மக்கள் இந்த நல்லவாய்ப்பினை பயன்படுத்தி, மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராக சேர்ந்து பலன் அடைய வேண்டும். மேலும், மீனவ மக்களின் நலனிற்காக மீனவர் நலவாரியத்திற்கு தலைவரை நியமித்து, மீனவ மக்களுக்கு பயன் அளிக்கும் வகையில் முகாம் நடத்தி, உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த ஆவணச் செய்த கழகத் தலைவர், முதல்வர் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க.காசிநாதன் (எ) தமிழரசன்**
**சனவரி 9 (2013)**



**சிறுவயது முதற்கொண்டு கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**மாத்தூர் கிளைக் கழகச் செயலாளராக தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாகவும், மாவட்டப் பிரதிநிதியாகவும் கழகப் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர் .**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**